வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவணகுமார்

தேதி 22.10.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச்செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று சபரிமலை அய்யப்பன் கோவிலில் இருமுடி கட்டி தரிசனம் செய்தார்.

இந்தியா அமெரிக்கா இடையிலான நட்புறவை வலுப்படுத்துவது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்பிடம் தொலைபேசியில் உரையாடினார்.

தேசிய கடற்படை தளபதிகளின் 2 ஆவது வருடாந்திர தேசிய மாநாடு இன்று புதுடெல்லியில் இன்று தொடங்கியது.

புதுச்சேரியில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று நேரில் சென்றுஆய்வு செய்தார்.

முர்மு (12)

குடியரசு தலைவர் திருமதி திரவுமதி முர்மு, 4 நாள் அரசு முறை பயணமாக நேற்று மாலை கேரளா சென்றடைந்தார். திருவனந்தபுரத்தில் கேரள ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேர்கர், முதலமைச்சர் திரு பிரணாய் விஜயன், மத்திய அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் மற்றும் மூத்த பிரமுகர்கள் அவருக்கு சிறப்பான வரவேற்பை அளித்தனர். இன்று சபரிமலை அய்யப்பன் கோவிலில் இருமுடி கட்டி 18 படிகள் ஏறி, குடியரசு தலைவர் சாமி தரிசனம் செய்தார். நாளை திருவனந்தபுரம் ராஜ்பவனில்

முன்னாள் குடியரசு தலைவர் கே ஆர் நாராயணனின் சிலையை திறந்து அவர் வைக்க உள்ளார். மேலும், அங்கு ஸ்ரீ நாராயணகுருவின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களிலும், பாலாவில் உள்ள செயின்ட் தாமஸ் கல்லூரி மற்றும் எர்ணாகுளத்தில் உள்ள செயின்ட் தெரேசா கல்லூரிகளின் நிகழ்ச்சிகளிலும் பங்கேற்க உள்ளார்.

மோடி (13)

இந்தியா அமெரிக்கா இடையிலான நட்புறவை வலுப்படுத்துவது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்பிடம் பேசியதாக கூறியுள்ளார். தமக்கு தீபாவளி வாழ்த்து தெரிவித்த அமெரிக்க அதிபருக்கு நன்றி தெரிவித்து பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பயங்கரவாதம் எந்த வடிவில் இருந்தாலும் அதனை இரு நாடுகளும் இணைந்து முறியடிப்பதற்கான முயற்சிகள் குறித்து திரு டிரம்பிடம் பேசியதாக தெரிவித்துள்ளார். வெள்ளை மாளிகையில் அமெரிக்க வாழ் இந்தியர்களிடையே தீபாவளி பண்டிகையை கொண்டாடிய போது உரையாற்றிய திரு டிரம்ப், பிரதமர் திரு நரேந்திர மோடி உயர்ந்த மனிதர் என்றும், அவர் தமது நெருங்கிய நண்பர் என்றும் குறிப்பிட்டார். இந்தியா-அமெரிக்கா இடையிலான வர்த்தக உறவுகள் மற்றும் மண்டல அமைதிக்கான நடவடிக்கைகள் தொடரும் என்றும் அவர் உறுதி அளித்தார்.

*ஜிஎஸ்டி- லடாக் (5)*

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த மாதம் 22-ஆம் தேதி நடைமுறைப்படுத்தப்பட்ட ஜிஎஸ்டி பச்சத் உத்சவ் சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. இந்த ஜிஎஸ்டி

*சீர்திருத்தங்களால் லடாக் பகுதியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்த ஒரு செய்தி தொகுப்பு,.............*

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி-லடாக் (15)*

**(வாய்ஸ்)**

பல்வேறு வகையான பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான சமீபத்திய ஜிஎஸ்டி குறைப்பு லடாக்கை வளமான பொருளாதாரமாக உயர்த்தி உள்ளது. கைவினை கலைஞர்கள், விவசாயிகள் மற்றும் சிறு நிறுவனங்களுக்கு நிவாரணம் அளித்து, திருத்தப்பட்ட வரி கட்டமைப்பின் கீழ், லே மற்றும் கார்கிலில் இருந்து பஷ்மினா கம்பளி, நம்டா கம்பளங்கள், உள்ளிட்ட கைத்தறி பொருட்களின் மீதான ஜிஎஸ்டி வரி விகிதம், 12 சதவிகித்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, உள்ளூர் கைவினை கலைஞர்கள் மற்றும் விவசாயிகளின் வருமான நிலைத்தன்மை மேம்பட்டுள்ளது என்றும், ஏற்றுமதிக்கான வளர்ச்சி அதிகரித்துள்ளது என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதற்கிடையில், 7 ஆயிரத்து 500 ரூபாய் வரையிலான தங்கும் விடுதிகளின் வரி விகிதம் 12 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால், சுற்றுலா பயணிகளின் வருகை அப்பகுதியின் பொருளாதார வளர்ச்சியை அதிகரித்து, லடாக் பகுதி மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தி உள்ளது குறிப்பிடத் தக்கது.

*கடற்படை தினம்* (17)

தேசிய கடற்படை தளபதிகளின் 2 ஆவது வருடாந்திர தேசிய மாநாடு புதுடெல்லியில் இன்று தொடங்கியது. 3 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில், ஆபரேஷன் சிந்தூர் மற்றும் கடற்படையின் செயல்பாடுகள் மற்றும் போர் தயார் நிலை குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது. இம்மாநாட்டில், கலந்து கொள்ளும் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் நாளை கடற்படை தளபதிகளிடம் சிறப்புரை ஆற்ற உள்ளார். கடற்படை தளபதிகளுடன் இணைந்து இந்திய பெருங்கடல் பிராந்தியத்தின் ஒட்டுமொத்த பாதுகாப்பு நிலைமை தொடர்பான திட்டங்களை அவர் மதிப்பாய்வு செய்ய உள்ளார். தற்போதைய புவிசார் சூழலில் பன்முக சவால்களை எதிர்கொள்ளும் வகையில் கடற்படையின் திறன்களை முன்னெடுத்து செல்வதற்கு இந்த மாநாடு ஒரு வாய்ப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்திய ராணுவம், இந்திய விமானப்படை மற்றும் இந்திய கடலோர காவல் படை ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்த போர் திறன் செயல்பாடுகள் மற்றும் கூட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் இந்த மாநாடு கவனம் செலுத்த உள்ளது. மாநாட்டில், ராணுவ தலைமை தளபதி, விமானப்படை தலைமை தளபதி, மற்றும் கடற்படை உயரதிகாரிகளும் பங்கேற்க உள்ளனர்.

*அமித் ஷா* (13)

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷாவின் பிறந்த நாளை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். பொது வாழ்வில் அர்ப்பணிப்பு உணர்வோடு கடைமையாற்றி வருபவர் திரு அதித் ஷா என்றும், நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்த பல்வேறு முயற்சிகளை எடுத்து வரும் அவர் நீண்ட காலம் வாழ தாம் இறைவனை வேண்டுவதாக தமது வாழ்த்து செய்தியில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், நாட்டின் வளர்ச்சிக்காக தொலைநோக்கு பார்வையுடன் அயராது பாடுபடுபவர் திரு அமித் ஷா என்று கூறியுள்ளார்.

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், திரு அமித் ஷா நல்ல ஆரோக்கியமும், நீண்ட ஆயுளும் பெற்று நாட்டை சிறந்த பாதையில் கொண்டு செல்ல, புதுச்சேரி மக்களின் சார்பாக தாம் வாழ்த்துவதாக தெரிவித்துள்ளார்.

*பீகார்* 1 (16)

பீகார் சட்டமன்ற தேர்தல் பிரச்சாரங்கள் விறுவிறுப்பு அடைந்துள்ள நிலையில், அரசியல் கட்சிகள் வாக்காளர்களை கவர பல்வேறு வாக்குறுதிகளை அளித்து வருகின்றன. மகா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் அனைத்து ஜீவிகா சகோதரிகளுக்கும் நிரந்தர அரசு வேலைகள் வழங்கப்படும் என்று ராஷ்டிரிய ஜனதா தள தலைவர் திரு தேஜஸ்வி பிரசாத் யாதவ் வாக்குறுதி அளித்துள்ளார். பாட்னாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், சுய உதவிக்குழுக்களுடன் தொடர்புடைய ஒவ்வொரு ஜீவிகா சகோதரிக்கும் மாத சம்பளமாக 30 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும், அதனுடன், சுகாதார காப்பீடு மற்றும் பிற சலுகைகளும் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

பீகார் துணை முதலமைச்சர் திரு சாம்ராட் சௌத்ரி, ஆர்ஜேடி தலைவர் திரு தேஜஸ்வியை கடுமையாக விமர்சித்துள்ளார். இதற்கிடையில், காங்கிரஸ் மூத்த தலைவரும், அக்கட்சியின் தேர்தல் பார்வையாளருமான திரு அசோக் கெலாட் இன்று பாட்னாவில், கிராண்ட் அலையன்ஸ் தலைவர்களிடையே கலந்துரையாடுகிறார். வரும் நாட்களில் கூட்டு தேர்தல் பிரச்சாரத்திற்கான உத்தி குறித்து திரு தேஜஸ்வி

*பீகார் 2* (11)

யாதவுடன், திரு கெலாட் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபுறம் தேசிய ஜனநாயக கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வந்தால், மாநில வளர்ச்சியின் வேகம் மேலும் அதிகரிக்கும் என்று பாஜக வலியுறுத்தி உள்ளது. பீகார் சட்டமன்ற தேர்தலில் மக்கள் மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு தெளிவான பெரும்பான்மையை வழங்குவார்கள் என்று பாஜக மாநில தலைவர் டாக்டர் திலிப் ஜெய்ஸ்வால் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, நவம்பர் 6 ஆம் தேதி பீகாரில் முதற்கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவும், தொடர்ந்து, 12 ஆம் தேதி 2 ஆம் கட்ட வாக்குப்பதிவும் நடைபெற உள்ளது. நவம்பர் 14 ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

*மழை-புதுச்சேரி* (13)

புதுச்சேரியில் நேற்று பெய்த கனமழையால் தாழ்வான பகுதிகளில் தேங்கிய மழை நீரால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்திராகாந்தி சதுக்கம் அருகே சாலையில் மழை நீர் தேங்கியதால் வாகன ஓட்டிகள் சிரமத்திற்கு உள்ளாயினர். ரெயின்போ நகர், கிருஷ்ணாநகர், தேங்காய்திட்டு, உருளையன்பேட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்நிலையில், முதலமைச்சர் திரு ரங்கசாமி மழை நீர் தேங்கிய பகுதிகளுக்கு சென்று ஆய்வு மேற்கொண்டார். மழை நீர் தேங்கிய இடங்களில் உடனடியாக தண்ணீரை வெளியேற்றுமாறும், அனைத்து வாய்க்கால்களையும் உடனடியாக தூர்வாருமாறும் பொதுப்பணித்துறை மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து

அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார். தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர்,............

**(வாய்ஸ் -சிளம்)**

இதனை தொடர்ந்து, மின்மோட்டார் பொருத்தப்பட்டு, தேங்கியிருந்த மழை நீர் வெளியேற்றப்பட்டது. இதுகுறித்து எமது செய்தியாளர் மேலும் கூறுகையில்.........

**( வாய்ஸ் கந்தன்)**

*வானிலை* (8)

தென்மேற்கு வங்க கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி அடுத்த 12 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனை தொடர்ந்து, அடுத்த 12 மணி நேரத்தில் இது வட தமிழகம், புதுச்சேரி, தெற்கு ஆந்திர கடலோர பகுதிகளை நோக்கி நகரக்கூடும் என்றும், இம்மையம் தெரிவித்துள்ளது. திருவள்ளுர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் இன்று அதி கனமழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

*காரைக்கால்* (10)

காரைக்கால் பண்டித ஜவகர்லால் நேரு வேளாண் கல்லூரியில், வேளாண் இளங்கலை விவசாயம் மற்றும் தோட்டக்கலை பட்டப்படிப்பிற்கு சுயநிதி பங்களிப்பு திட்டத்தின் கீழ், நேரடி சேர்க்கை நடைபெறுகிறது. விண்ணப்பதாரர்கள் வரும் 31 ஆம் தேதி வரை, இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று வேளாண் கல்லூரி

முதல்வர் திரு சங்கர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார். மேலும், காலியாக உள்ள இடங்கள் மற்றும் கட்டண விபரங்கள் குறித்த விபரங்களை www.centacpuducherry.in என்ற இணையதளம் மூலமாகவோ, அல்லது 04368-261473 என்ற தொலைபேசி எண் மூலமாகவோ அறிந்து கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பேரிடர் மேலாண்மைத் துறை (16)

தொடர் மழை காரணமாக வீடூர் அணையின் முழு கொள்ளளவான 32 அடியில், 30.300 அடி நிரம்பி உள்ளதால், இன்று நண்பகல் 12 மணியளவில் விநாடிக்கு 500 முதல் 3 ஆயிரம் கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளதாக புதுச்சேரி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அறிவித்துள்ளது. எனவே, சங்கராபரணி ஆற்றின் கரையோரம் வசிக்கும் மக்கள் குறிப்பாக, வில்லியனூர் தாலுக்காவை சேர்ந்த மணலிப்பட்டு, செட்டிப்பட்டு, கூனிச்சம்பட்டு, சுத்துக்கேணி, கொடாத்தூர், வம்புப்பட்டு, செல்லிப்பட்டு, பிள்ளையார்குப்பம், திருக்காஞ்சி, உறுவையாறு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வசிப்பவர்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். மேலும், சங்கராபரணி ஆற்றில் இறங்குவது, மீன்பிடிப்பது, விளையாடுவது, நீந்துவது, செல்பி எடுப்பது போன்ற எந்தவிதமான செயல்களிலும் ஈடுபட வேண்டாம் என்று மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் அறிவுறுத்தி உள்ளார். பொதுமக்கள் பேரிடர் தொடர்பான தங்களது புகார்களுக்கு இலவச அழைப்பு எண்களான 1077, 1070, 112, அல்லது 94889 81070 என்ற வாட்ஸ் அப் எண் மூலமாக தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.